**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No 322/2013 P.W. 3/L.W.7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. இருதய மேரி | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 26.03.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. 2, 3 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து இல்லதரசியாக இருந்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியாது. அ.சா1, அ.சா2 என்னுடைய மகள். வழக்கு சம்பவம் பற்றி ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 25.12.2009 ம் தேதி இரவு 23.00 மணிக்கு ஆன்றணி விஜய், தொம்மை, லோப்பாஸ் ஆகியோர்கள் அ.சா1 வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த போது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அவரது வீட்டினுள் அத்துமீறி நுழைந்து பெண் என்றும் பாராமல் செல்வி மற்றும் சிந்துஜா ஆகியோர்கள் தகாத வார்த்தைகள் பேசினார்கள் என்றும், காயம் ஏற்படுத்தினார்கள் என்றும், கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் கூறிவிட்டு தற்சமயம்

நான் வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

இல்லை .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.